தினமலர் நமது மலர்

வாசகர்களே சொல்லுங்க: உங்கள் பகுதி பிரச்னைகளை 98423 70262 என்ற வாட்ஸ்அப்பில் எண்ணில் தெரிவியுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.

3.11.2026

தர்மபுரி ◦ கிருஷ்ணகிரி

வலியுறுத்தல்

- காட்சி பொருளான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி
- குடிநீர் தட்டுப்பாட்டால் அவதிப்படும் கிராம மக்கள்
- விரைந்து பயன்பாட்டுக்கு கொண்டு வர கோரிக்கை

■ தர்மபுரி, நவ. 3–

தர்மபுரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று வாராந்திர பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சரவணன் தலைமையில் நடந்தது. இதில் இலவச வீடு, வீட்டுமனை பட்டா, வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுய தொழில் கடன், முதியோர் உதவித்தொகை, சாலை மற்றும் குடிநீர் உள்–ளிட்ட கோரிக்கைகள் குறித்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 664 பேர் மனு கொடுத்தனர்.



தர்மபுரி கலெக்டர் அலுவலக வளாகத்தில் தீக்குளிக்க முயன்ற பெண் மற்றும் அவரது மகனை போலீசார் தடுத்து தண்ணீர் ஊற்றி காப்பாற்றினர்.

மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர் சரவணன் மனுக்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி விரைந்து தீர்வு காண உத்தரவிட்டார். கூட்டத்தில் இந்திரா நகரை சேர்ந்த சுப்பிரமணி கொடுத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

தர்மபுரி யூனியன் குப்பூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பெரியகும்பம்பட்டி மற்றும் அதன் அருகே உள்ள கிராமங்களில் ஆயிரத்து 500க்கும் அதிகமான குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கு வதற்காக கடந்த 2023–24ம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக பெரிய குரும்பட்டியில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்க குடிநீர் தொட்டி கட்டப்பட்டது.

கட்டி முடிக்கப்பட்டு மூன்றாண்டுகள் ஆகியும் இதுவரை இந்த மேல்நிலை குடிநீர் தொட்டியை பயன் பாட்டுக்கு கொண்டு வர பஞ். மற்றும் தர்மபுரி யூனியன் நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமல் உள்ளது.

இதனால், பெரியகும்பம் பட்டி மற்றும் அருகே உள்ள கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் குடிநீர் தட்டுப்பாட்டால் அவதியை டைந்து வருகின்றனர்.

எனவே பஞ்சாயத்து மற்றும் யூனியன் நிர்வாகம் விரைந்து பெரியகும்பம்பட்டியில் காட்சி பொருளாக உள்ள மேல்நிலை நீர்த் தேக்க குடிநீர் தொட்டியை பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாய், மகன் தீக்குளிக்க முயற்சி

தர்மபுரி அடுத்த செட்டிக்கரையை சேர்ந்தவர் சரோஜா (63). இவர் தந்தையின் சொத்தில் தனக்கான பங்கை தரும்படி சரோஜா தனது சகோதரரிடம் கேட்டுள்ளார். அவர் பங்கு தரவில்லை. இதனால் விரக்தி அடைந்த சரோஜா நேற்று தனது மகன் திருப்பதி, உறவினர் பிரபு (46) ஆகியோருடன் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் இது தொடர்பாக மனு கொடுக்க வந்தார்.

அப்போது சரோஜா உள்ளிட்ட 3 பேரும் திடீர் என தங்களது உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்றனர். இதை கண்டு அதிர்ச்சியடைந்த அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் அவர்களை தடுத்து, தண்ணீரை ஊற்றி 3 பேரையும் காப்பாற்றினர். இதையடுத்து தர்மபுரி போலீசார் சரோஜா, பிரபு, திருப்பதி ஆகியோரிடம் இது குறித்து விசாரணை நடத்தினர்.



ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு

■ பென்னாகரம், நவ. 3–

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில தினங்களாக வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக நீர் வரத்து இருந்தது.

இந்நிலையில் தமிழக கர்நாடக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவில் நேற்று மாலை நிலவரப்படி வினாடிக்கு 4 ஆயிரம் கன அடியாக நீர்வரத்து அதிக ரித்தது.

இதனால் ஒகேனக்கல்லில் மெயின் அருவி, ஐந்தருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. நீர்வரத்து உயர்வால் வெளி மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒரளவு அதிகரித்துள்ளது. நேற்று ஒகேனக்கல் வந்த சுற்றுலா பயணிகள் காவிரியில் பரிசல் பயணம் செய்தும், எண்ணெய மசாஜ் செய்து ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். இதனால் மீன் சந்தை மற்றும் சமையல் கூடங்கள் உள்ளிட்ட பகுதி களில் மக்கள் கூட்டம் அதிகரித்தது.

சுற்றுலா பயணிகள் வருகையால் சமையல் கலைஞர்கள், மசாஜ் தொழி லாளர்கள், பரிசல் ஓட்டி கள், லாட்ஜ் உரிமையாளர் கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

TAMILNADU MEDICAL SERVICES CORPORATION LTD.
No.417, Pantheon Road, Egmore, Chennai-600008.
Phone:28191890/28190259; Fax: 044 -28190636; Mail: equipment.tnmsc@tn.gov.in

Sl.No	Online Tender no.	Sale Period	Pre bid	Submission	Opening
1	E1591/HKMP/TNMSC/ENGG/2026, dt. 30.10.2026 - Tender for Selection of firm to Design, Develop, and Implement and Maintain the Housekeeping and Environmental Hygiene Monitoring Platform for Government Hospitals, Tamil Nadu.	04.11.2026 to 19.11.2026	11.11.2026 11.30 AM	20.11.2026 11.00 AM	20.11.2026 12.00 Noon

For details visit www.tntenders.gov.in and TNMSC website www.tnmsc.tn.gov.in

DIPR/3333/TENDER/2026 GENERAL MANAGER (EQUIPMENT)

சீனிவாச பெருமாளுக்கு மலர்களால் அபிஷேகம்

■ கிருஷ்ணகிரி, நவ. 3



கிருஷ்ணகிரி நரசிம்ம சுவாமி கோயிலில் சீனிவாச பெருமாளுக்கு 1 டன் மலர்களால் புஷ்பாபிஷேகம் நடந்தது.

கிருஷ்ணகிரி பழைய பேட்டையில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப் பாட்டில் உள்ள லட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலில், ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீனிவாச பெருமாள் சுவா மிக்கு, புஷ்பாபிஷேக விழா நடந்தது.

இதையொட்டி மகா கணபதி பூஜை, நவகிரஹ பூஜை, லட்சுமி குபேரஹோ மம், சுதர்சன ஹோமம், தன்வந்திரி ஹோமம், புத் திரபாக்கியம், படிப்பு, மன அமைதி, எதிர்மறை ஆற் றல் முற்றிலும் நீங்க மஹா பூர்ணாஹுதி ஆகியவை நடந்தது. காலை 9 மணி க்கு, மஹா அபிஷேகமும், பூக்கடை ஊர்வலமும் நடந்தது. 11.30 மணிக்கு, ஸ்ரீதேவி, பூதேவி சமேத சீனிவாச சுவாமிக்கு, 1 டன் மலர்களால் புஷ்பாபிஷே கம் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக் கும் அன்னதானம் வழங்கப்பட்டன.

சென்டர் மீடியனில் டூவீலர் மோதி பெண் பரிதாப பலி

■ பர்கூர், நவ. 3–

திருப்பத்தூர் மாவட் டம் ரெட்டியூர் பகுதியை சேர்ந்தவர் கோவிந்தம்மாள் (42). இவரது மகன் கிரி வாசன் (23). இவர் ஒகூரில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

நேற்று முன்தினம் மாலை கிரிவாசன் தனது சகோதரி மகன் கவி னேஷ்(3) மற்றும் தாயார் கோவிந்தம்மாளுடன் ரெட் டியூரிலிருந்து டூவீலரில் ஒகூர் நோக்கி வந்து கொண் டிருந்தார்.

அப்போது பர்கூர் அருகே பி.ஆர்.ஜி.மாதேப் பள்ளி அரசு பொறியியல் கல்லூரி எதிரில் கிரிவாசன் ஓட்டி வந்த டூவீலர் நிலை தடுமாறி சாலை நடுவில் உள்ள சென்டர் மீடியனில் மோதி கவிழ்ந்தது. இதில் கோவிந்தம்மாள் பலத்த காயமடைந்தார்.

அங் கிருந் த வர்கள் அவரை மீட்டு பர்கூர் அரசு மரு த்து வ ம னை க் கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் கோவிந்தம் மாள் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரி வித்தனர்.

இந்த விபத்து குறித்து பர்கூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு
வேலூர் மாநகராட்சி – மாநகராட்சி அலுவலகம், வேலூர்
ந.க.எண்.3124/2026-27/இ1/உ3 விரும்பம் தெரிவிக்கும் ஒப்புத்தம்பள்ளி அறிவிப்பு நாள்: 28.10.2026
Expression of Interest (EOI)

வ.எண்.	விரும்பம் தெரிவிக்கும் ஒப்புத்தம்பள்ளி கோரும் பணி சம்மந்தமான விவரம்
1	பணியின் விவரம்	வேலூர் மாநகராட்சி சி.எம்.டி நகர திட்டத்தின் கீழ் அம்மணாங்குட்டை கடுவாடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரியவு தகன மேடையை சேவை மனப்பான்மையுடன் இயக்கி பராமரிக்கும் பணி (Request for Expression of Interest (EOI), (Single Cover System) ஒப்புத்த வைப்புத் தொகை : ரூ.10,000/- பணி காலம் : 3 வருடம்
2	ஒப்புத்தம்பள்ளி நடுவண் விலை, வழங்கப்படும் நாள், நேரம்	ஒப்புத்தம்பள்ளி பிடிவங்கள் நடுவண் 04.11.2026 முதல் 18.11.2026 பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிற்கம் செய்து கொள்ளலாம்.
3	ஒப்புத்தம்பள்ளி தேதி மற்றும் நேரம்	18.11.2026 பகல்1மணி நேரம் 3.00 மணி வரை
4	ஒப்புத்தம்பள்ளி திறக்கப்படும் நாள் நேரம் மற்றும் இடம்	18.11.2026 பகல்1மணி நேரம் 3.30 மணி வேலூர் மாநகராட்சி அலுவலகம்
5	ஒப்புத்தம்பள்ளி நடுவண் தொகுப் மற்றும் இதர விவரங்கள் தெரிந்துகொள்ளலாம்	இதர விவரங்கள் https://tntenders.gov.in என்ற வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒப்புத்தம்பள்ளி அறிவிப்பில் பார்த்து தெரிந்துக் கொள்ளலாம். அல்லது அலுவலக வேலை நாட்களில் அலுவலகம் பணி நேரத்தில் பொறியியல் பிரிவில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

தொடர்புக்கு : நிர்வாகப்பொறி எண் : 0416 - 2220578 செ.உ.தொ இ 3325 ஒப்புத்தம்பள்ளி/2026 **ஆணையாளர், வேலூர் மாநகராட்சி**

13ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு கண்டெடுப்பு

■ கிருஷ்ணகிரி, நவ. 3–

13ம் நூற்றாண்டில் குந்தாணி ராஜ்ஜியத்தின் தலைநகரான விளங்கிய குந்தாணி (சின்னக்கொத் தூர்) பகுதியில் கிருஷ்ண கிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்கம், கிருஷ்ணகிரி அருங் காட்சியகம் மற்றும் தமிழ கத் தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் ஆகி யவை இணைந்து ஆய்வு மேற்கொண்டன.

இதில் குஞ்சம்மாள் கோயில் உற்சவ மண்டபத் தின் பின்புறம் புதர்களுக்கு இடையே இருந்த இரண்டு பலகைக் கற்களைப் புரட் டிப் பார்த்தபோது அதில் கல்வெட்டு இருப்பது கண் டுபிடிக்கப்பட்டது. இக் கல்வெட்டினை கலெக்டர் தினேஷ்குமார் ஆய்வு செய் தார். இரண்டு துண்டுகளாக இருந்த இந்தக் கல்வெட் டினை, தமிழகத் தொன்மை இயல் ஆய்வு நிறுவனச் செயலர் கோவிந்தராஜ் படியெடுத்து வாசித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

சோழர் ஆட்சியின் வீழ்ச்சியில் பல்வேறு குறு நிலத் தலைவர்கள் தங்கள் ஆண்டுவந்த பகுதிகளை சொந்தமாக ஆளத் தொடங் கினர்.

சம்புவராயர்கள் ஆர னியை அடுத்த படைவீட் டினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முக்கியமான குறுநில மன் னர்களாவர். இதே காலகட் டத்தில் ஒகூர் பகுதியை பூர்வாதராயர்கள் என்னும் குறுநிலத் தலைவர்கள் ஆண்டுவந்தனர்.

இது போன்ற குறுநிலத் தலைவர்களுக்கு மேல், பொதுவான பெருமன்னர் கள் இல்லாததால் தங்க ளுக்குள் சண்டையைத் தவி ர்த்துக் கொள்ள அண்டை நிலத்தாருடன் ஒப்பந்தம் செய்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

அவ்வாறு பூர்வாதராய ருக்கும், சம்பு வராயருக்கும் இடை யே செய்துகொண்ட ஒப்பந்தக் கல்வெட்டுதான் இது.

இக்கல்வெட்டின் இறு திப்பகுதி இல்லை. இது கிருஷ்ணகிரிமாவட்டத்தில் கிடைத்துள்ள முதல் சம்பு வராயர் கல்வெட்டாகும்.

மூன்றாம் குலோத்துங்க னின் 31ம் ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1209) தாமத்தின் அத்திமல்ல பூர்வாதராய நோடு செங்கேணி அம்மை யப்பன் அழகியசோழனான ஜெரிலிசோழ சம்புவராயன் என்பவர் செய்து கொள் ளும் ஒப்பந்தத்தை இக்கல் வெட்டு குறிப்பிடுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

அ ரு ங் கா ட் சி ய க காப்பாட்சியர் சிவக்குமார், ஆய்வுக்குழுத்தலைவர் நாராயணமூர்த்தி, செயலர் தமிழ்செல்வன், மாருதி மனோகரன், அஸ்வின், தாசில்தார் ராஜலட்சுமி, வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் சின்னக்கொத்தூரில் கண்டெடுக்கப்பட்ட 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு.



மாநில அளவிலான பேச்சு, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற கிருஷ்ணகிரி மாவட்ட மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி கலெக்டர் தினேஷ்குமார் பாராட்டினார்.

மக்கள் குறைதீர் கூட்டத்தில் 1,479 மனுக்கள் குவிந்தன

■ கிருஷ்ணகிரி, நவ. 3

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் கலெக் டர் தினேஷ்குமார் தலை மையில் நேற்று நடந்தது.

இதில் வீட்டுமனைப் பட்டா, வீடு, முதியோர் உதவித்தொகை, இலவச தையல் எந்திரம், சலவைப் பெட்டி, சாலை வசதி, மின் இணைப்பு மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை உள்ளிட்ட கோரிக் கைகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து 1,479 மனுக்கள் பெறப் பட்டன.

மனுக்களை பரிசீலித்து, தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து 77வது உலக ஜெனிவா ஒப்பந்த தினத்தை முன்னிட்டு, பள்ளி, கல்லூரி மாணவர் களுக்கு நடத்தப்பட்ட பேச்சு, தமிழ் மற்றும் ஆங்கிலக் கட்டுரைப் போட்டிகளில் மாநில அள வில் 2 மற்றும் 3ம் இடங் களைப் பிடித்த கிருஷ்ண கிரி மாவட்ட மாணவி களுக்கு பதக்கம், காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை கலெக்டர் வழங்கினார்.

தொடர்ந்து தேன் கனிக்கோட்டை அருகே கோனசந்திரம் கிராமத்தைச் சேர்ந்த பேட்டியம்மா என் பவர், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட தனது பேர னின் தொடர் சிகிச்சைக்கு நிதியுதவி கோரி மனு அளித்தார். இதையடுத்து, கலெக்டரின் விருப்ப நிதி யிலிருந்து ரூ.10 ஆயிரத் துக்கான காசோலையை அவரிடம் வழங்கினார். இதில் டி.ஆர்ஓ மஞ்சுளா, வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான் உள்ளிட்ட அதி காரிகள் பங்கேற்றனர்.

பேங்க் ஆஃப் பரோடா

தர்மபுரி கிளை
சந்தோஷ் வணிக வளாகம்,
எ.ண்.61 ஜி. பென்னாகரம் சாலை, தர்மபுரி - 636702
போன் : 04342 - 260081, Mail: dhadha@bankofbaroda.co.in

(baankinet போர்டல்களில் நடத்தப்படும் ஏலத்திற்தான செய்திக்தான்களில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aவின்படி (விதி 6(2) மற்றும் 8(6)வை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்ப பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், பேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1) M/s. Sri Balaji Company, உரிமையாளர்: திரு.பாலாஜி த/பெ. மது, நெ. 139, பென்னாகரம் ரோடு, தர்மபுரி - 636702. 2) திரு.பாலாஜி த/பெ. மது, முகவரி1: 56/18, நாட்டாண்மையர், தர்மபுரி-636701, முகவரி2: நெ. 139, பென்னாகரம் ரோடு, தர்மபுரி - 636702. மற்றும் 3) திருமதி .S.விஜயலட்சுமி க/பெ. பாலாஜி, 56/18, நாட்டான்மையர், தர்மபுரி-636701.

A/c.No.05480500011453, நிலுவை தொகை ரூ.42,12,549.50/- மேலும் 01.11.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் கருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

தர்மபுரி மாவட்டம், தர்மபுரி பதிவு மாவட்டம், தர்மபுரி இணை -2 சார்பதிவு மாவட்டம், தர்மபுரி தாலுக்கா, அதாகபாடி கிராமம்

1. பட்டா எண். 1944, சர்வே நெ.244, பகுசை ஏக்கர் 6.10, மதிப்டே ரூ. 6.70, இதன் உட்பிரிவு சர்வே நெ. 244/1, பகுசை ஹெக்டர் 1.21.50செ 3.00 செண்ட் பரப்பளவு கொண்ட பகுசை நிலம்.

2. சர்வே நெ. 244/2, பகுசை ஹெக்டர்0.67.0, ஏக்கர் 1.65 செண்ட் பரப்பளவு கொண்ட பகுசை நிலம்.

3. சர்வே நெ. 545, பகுசை ஹெக்டர் 3.12 செண்ட், இதன் உட்பிரிவு சர்வே நெ. 545/1, பகுசை ஹெக்டர் 0.08.0, ஏக்கர்0.20 செண்ட் பரப்பளவு கொண்ட பகுசை நிலம்.

4. சர்வே நெ. 546, பகுசை ஹெக்டர் 4.44 செண்ட், மதிப்டே ரூ. 7.50. இதன் உட்பிரிவு சர்வே நெ. 546/1, பகுசை ஹெக்டர் 1.17.0 மதிப்டே ரூ.2.52 இதன் உட்பிரிவு சர்வே நெ. 546/1A, பகுசை ஹெக்டர் 0.92.50 இதன் உட்பிரிவு சர்வே நெ. 546/1A2, பகுசை ஹெக்டர் 0.18.22, பகுசை ஏக்கர் 0.45 செண்ட் பரப்பளவு கொண்ட நிலம் சூரியா கார்டன் என்ற பெயரில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு அதில் மனை எண்கள் 4, 5 மற்றும் 13 மொத்த பரப்பளவு 4413 சதுரஅடி.

1 மனை எண்கள் 4, 5க்கான நான்கு எல்லை: மனை எண் 6க்கு வடக்கு, மனை எண் 3க்கு தெற்கு, 20அடி அகல பொதுப்பாதைக்கு மேற்கு. பகுசாயத்தார் சாலைக்கு கிழக்கு.

2. மனை எண்கள் 4, 5க்கான அளவுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் 58 ½ அடி. கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் 38 ½ அடி. தெற்கிலிருந்து வடக்காக கிழக்கு பக்கம் 69 ½ அடி. தெற்கிலிருந்து வடக்காக மேற்கு பக்கம் 63 அடி. மனை எண்கள் 4, 5க்கான மொத்தப் பரப்பளவு 3213 சதுரஅடி. பொது வழி மற்றும் அனைத்து உரிமைகளுடன் கொண்டது.

3 மனை எண் 13க்கான நான்கு எல்லை: மனை எண் 12க்கு வடக்கு, மனை எண் 14க் தெற்கு, 20 அடி அகல பொது பாதைக்கு மேற்கு, மனை எண்கள் 4, 5க்கு கிழக்கு.

4. மனை எண் 13க்கான அளவுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் 40 அடி. கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் 40 அடி. தெற்கிலிருந்து வடக்காக கிழக்கு பக்கம் 30 அடி. தெற்கிலிருந்து வடக்காக மேற்கு பக்கம் 30 அடி. மனை எண் 13க்கான மொத்தப் பரப்பளவு 1200 சதுரஅடி, பொது வழி மற்றும் அனைத்து உரிமைகளுடன் கொண்டது.

மனை எண்கள் 4, 5 மற்றும் 13 இதன் மொத்தப்பரப்பளவு 4413 சதுரஅடி காலி நிலம் பொது வழி மற்றும் அனைத்து உரிமைகளுடன் கொண்டது.

இந்த சொத்தானது அதாகபாடி கிராம பஞ்சாயத்து மற்றும் தர்மபுரி ஒன்றிய கவுன்சில் எல்லைக்கு உட்பட்டது. இந்த சொத்தானது (மனை எண்கள் 4, 5 மற்றும் 13) உட்பிரிவு சர்வே நெ. 244/1A1C கீழ் வருகிறது.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 33,00,000/- டேவணித் தொகை ரூ. 3,30,000/- ஏல உயர்வு தொகை ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 10.12.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 20.11.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 10.12.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **baanknet.com** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9740122628 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 02.11.2026
இடம் : தர்மபுரி

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா